

# தங்கநிலா

உ.நிசார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

| | |
|---|---|
| Class No: | |
| Acc No | 80 |

LENDING
ARASADY PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

# தங்கநிலா

| | |
|---|---|
| Class No: | |
| Acc No | 80 |

கல்வி அமைச்சு
அனுமதிப்பத்திரம்

புத்தகத்தின் பெயர் : தங்கநிலா

நூலாசிரியர் : உ.நிசார்     அனுமதிப்பத்திர இலக்கம் : EPAB / 02 / 11016

1952 பெப்ரவரி மாதம் 29ம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை அரசின் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரமான உதவி நன்கொடை பெறும் சுய மொழி இரட்டை மொழி மற்றும் ஆங்கிலம் பாடசாலை தொடர்பான பிரமாணக் குறிப்பின் 19/ஏ வாசகத்தின் கீழ் கல்விப் பணிப்பாளர் நாயகத்தினால் பாடசாலை நூலகப் புத்தகமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

விஜித வெலகெதர
செயலாளர்
கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபை

2017 யூலை மாதம் 19
கல்வி அமைச்சு, "இசுருபாய," பத்தரமுல்ல.
அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் திகதி :2022.07.18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரின் ஏனைய நூல்கள்

**கவிதை**

01. கனவுப் பூக்கள் - 2005
02. ஓயாத அலைகள் - 2007
03. திராட்சை ரசம் - 2009
04. ஒரே பூமியில் நானும் நீயும் - 2015

**சிறுகதை**

01. உயிர்வலி - 2009
02. பச்சை மனிதன் - 2013
03. பூவிதமும் புனிதமும் - 2016

**சிறுவர் பாடல்கள்**

01. நட்சத்திரப் பூக்கள் - 2006
02. வெண்ணிலா - 2007
03. மலரும் மொட்டுக்கள் - 2007
04. சிறகு விரி - 2008
05. பாவிருந்து - 2009
06. இளைய நிலா - 2009
07. நல்ல தங்காள் - 2010
08. கோமாதா - 2014

**சிறுவர் கதைகள்**

01. முத்துக்கணையாழி பாகம் 1- 2010
02. யானையும் பானையும் - 2011
03. முத்துக்கணையாழி பாகம் 2- 2011
04. காடும் கதை சொல்லும் - 2013
05. பாணியில் மிதந்த தோணி - 2014
06. முத்துக்கணையாழி பாகம் 3 - 2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கநிலா

சிறுவர் பாடல் தொகுப்பு

உ. நிசார்

வெளியீடு
பானு வெளியீட்டகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

© எச். எல். எம். நிசார் - 2017

புனைப் பெயர் : உ. நிசார்
: உடுநுவரை நிசார்

தொலைபேசி இல : 0094 77 8216281

தொலைநகல் : hlmnizar@gmail.com

**ISBN 978-955-0503-12-4**

அச்சுப்பதிவு : யுனிக் ஓப்செட் பிரின்டர்ஸ்,
ஹஸன் மாவத்த,
மாவனல்லை.

வெளியீடு : பானு வெளியீட்டகம்

**Thanga Nila**

Childrens' Song

© H.L.M. Nizar - 2017

Tel. : 0094 77 8216281

E-mail : hlmnizar@gmail.com

**ISBN 978-955-0503-12-4**

Printed by : Unique Offset Printers
Hassan Mawatha,
Mawanella.

Published by : Banu Publishers



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

சாரா மர்யம்
அன்புப் பேத்திக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் இலங்கை நாடு

அலை கடல் வந்து கொஞ்சும்
அழகான நாடு - பசும்
இலை தளிர் மலர் சிரிக்கும்
இதமான நாடு

கான மயில் ஆடும் போது
கருங்குயிலும் பாடி - நம்
கானகத்தை அணி செய்யும்
கவர்ச்சியான நாடு

நீர் வளம் நிறைந் திருக்க
நிலம் மகிழ் நாடு - நற்
சீர் மிகுந்த கழனிகளால்
சிறப்புறும் நாடு

நன் நெறியை போதிக்கும்
நான்கு மதங்களை - என்றும்
இன்முகமாய் ஏற்று மகிழும்
எங்கள் இலங்கை நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கநிலா

தங்கநிலா உதிக்குது
பொங்கி வரத் துடிக்குது
எங்குமொளி பாய்ந்திட
மங்களமாய் இருக்குது

பனியும் மெல்லப் பொழியுது
பால் நிலவில் கலக்குது
கனிந்து வரும் இரவிலே
கவலை எல்லாம் மறக்குது

அல்லி மலர் பூக்குது
முல்லை கூட மலருது
மல்லிகையும் இதழ் விரித்து
மணத்தை அள்ளிப் பொழியுது

விண்மீன்கள் கூட்டமாய்
வெண்நிலவைச் சூழ்ந்தங்கு
கண் சிமிட்டும் காட்சியோ
கண் கொள்ளாக் காட்சியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா

அம்மா எனது அம்மா என்னை
அரவணைக்கும் அம்மா - நான்
சும்மா தும்மினாலும் இறை
துணையை வேண்டும் அம்மா

பாலை மட்டுமல்ல நல்ல
பண்புகளையும் ஊட்டி - ஒரு
சோலை போல வளர்க்க என்னை
தொடர்ந் துழைக்கும் அம்மா

பள்ளிக் கூடம் விட்டு வர
பாதை ஓரம் வந்து - என்னை
அள்ளி அணைத்து முத்தம் தந்து
அன்பு காட்டும் அம்மா

காலை மாலை இரவு பகல்
வேளைக்குணவு தந்து - வரும்
நாளைய நாள் நான்தானென
நம்பியிருக்கும் அம்மா



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேனீ

தேனீ தேனீ தேனீ - நறுந்
தேனைத் தரும் தேனீ
பானியாகத் தேனை நன்கு
பதப்படுத்தும் தேனீ

ஆடி வரும் தேனீ - பண்
பாடி வரும் தேனீ
நாடி வந்து மலர்களுடன்
கூடி மகிழும் தேனீ

மிடுக்கு மிக்க தேனீ - மிக
எடுப்பு மிக்க தேனீ
கொடுக்கினாலே பகைவரை
கொட்டி விடும் தேனீ

சோர்ந்திடாத தேனீ - ஒன்று
சேர்ந்து வாழும் தேனீ
சேர்த்துப் பாதுகாக்கத் தேனை
தொடர்ந்து பறக்கும் தேனீ

உ. நிசார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானவில்

அம்மா இங்கே வா அம்மா
அழகை அங்கே பாரம்மா
சும்மா இருந்த வானத்தில்
தோரணம் இட்டது தாரம்மா

எண்ணிப் பார்த்தேன் நான் அம்மா
ஏழு நிறங்கள் இருக்குதம்மா
மின்னும் அந்தத் தோரணத்தை
வில்லாய் வளைத்தது தாரம்மா

காண அழகுக் காட்சி அம்மா
களிப்பை எனக்குத் தருகுதம்மா
வானவில்லோ அது வென்று
வந்து பார்த்துச் சொல்லம்மா

கண்ணை இமைக்கும் நேரமம்மா
வண்ணக் கோலம் மறைந்ததம்மா
இன்னும் பொறுக்க முடியாது
இங்கே உடனே வா அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்டிலொரு காட்சி

குட்டி முயல் தூர நின்று
எட்டிப் பார்க்குது - மான்
குட்டி வந்து தாயின் மடியை
முட்டி மோதுது

மந்தியொன்று குந்திக் குந்தி
மரத்தில் தாவுது - யானைப்
பந்தியொன்று காட்டுக்குள்ளே
பவனி வருகுது

வான மழை மெல்லப் பொழிய
பூமி மகிழுது - உடன்
கான மயில் நடன மாடி
களிப்படையுது

சித்தம் மகிழ்ந்த புள்ளிக் குயில்
சிந்து பாடுது - அங்கே
கத்திக் கத்தித் தவளையொன்று
தத்திப் பாயுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றி

சுடராகி மின் மினியின்
உடல் ஒளிருது - தன்
மடல் விரிய வலி கொண்டு
மலர் பூக்குது

வீழ்ந்தாலும் அருவிகள்
எழுந்தோடுது - சகதி
தாழ்ந்தாலும் தாமரைகள்
தரம் பேணுது

அடம் பிடிக்கும் அலையோடு
கடல் அலையுது - திரி
உடல் எரித்து உலகுக்கு
ஒளி ஊட்டுது

இளங் கன்று பிறந்ததும்
எழுந்தோடுது - மரம்
நிலம் பிளந்து வேர் நுழைத்து
நீர் தேடுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தையார்

ஓட்டுக்குள்ளே ஒழிந்து கொள்ளும்
ஒருவர் அதோ வருகிறார் - நம்
தோட்டங்களில் வாழ்ந்து கொண்டு
தொல்லைகளைத் தருகிறார்

தலையில் உணர் கொம்பு இரண்டை
தாங்கிக் கொண்டு வருகிறார் - எங்கும்
அலையும் போது அவற்றை அவர்
அசைத்த வண்ணம் வருகிறார்

இரவும் வந்து இருளும் சூழ
எங்கும் நடமாடுவார் - ஓர்
இரக்க மின்றிப் பயிர்களிலே
இலை தளிரைத் தின்னுவார்

இரு பாலும் அமைந்த உடல்
இவருக்குள்ளே இருக்குது - சிறு
முட்டைகளால் இனப் பெருக்கம்
சிறந்த படி நடக்குது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி மூக்கு மாம்பழம்

நல்ல நல்ல மாம்பழம் - இது
நாவுக்கினிய மாம்பழம்
துள்ளி ஓடி வா வா வா
தோலைச் சீவித் தின்னுவோம்

கிளி மூக்கு மாம்பழம் - இது
கிடைக்க அரிய மாம்பழம்
கலி தீர்க்க வா வா வா
களிப்படையத் தின்னுவோம்

எனக்கு ஒரு மாம்பழம் - இதோ
உனக்கும் ஒரு மாம்பழம்
மணம் வீசுது வா வா வா
மகிழ்ந்து நாமும் தின்னுவோம்

தின்னுவோம் வா தின்னுவோம் - தேன்
சிந்தும் இதைத் தின்னுவோம்
மென்மையான மாம்பழமிது
மெல்லச் சுவைத்துத் தின்னுவோம்

Arasady Public Library
Municipal Council
Batticaloa.
Class No
Acc No 80



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பைகளை ஒழிப்போம்

தப்புச் செய்ய மாட்டோம் - இனி
தவறு செய்ய மாட்டோம்
குப்பைகளை வீதியோரம்
கொட்டி விட மாட்டோம்

வீட்டில் உள்ள புனிதம் - நம்
வீதிகளிலும் வேண்டும்
நாட்டமதனை வைப்போம் நாம்
நன்மை எமக்குக் கிடைக்கும்

துரித கவனம் கொள்வோம் - இனி
தூய்மை பேணி நிற்போம்
உரிய முறையில் குப்பைகளை
உடனே ஒழித்திடுவோம்

நுளம்பை எதிர் கொண்டு - டெங்கு
நோயைத் தடுப்பதற்கு
களம் அமைத்துக் கொண்டு நம்
வளங்களைக் காப்போம்

**உ. நிசார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோமாதா

எங்கள் வீட்டுப் பசு - அது
எழில் மிகுந்த பசு
மங்களங்கள் நிறைந்து நிதம்
மனதைக் கவரும் பசு

புல்லை மேய்ந்து விட்டு - மெல்ல
மெல்ல அசை போட்டு
கள்ளமேது மின்றிப் பாலை
அள்ளிப் பொழியும் பசு

கன்றைப் பிரியும் போது - ஐயோ
கதறி அம்மா என்று
துன்பம் மிகவும் கொண்டு அதன்
கன்றை அழைக்கும் பசு

நாடி வந்த டைந்து - உடன்
கூடி வாழப்பழகி
கோடி நன்மை செய்யும் அதை
கோ மாதா என்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவனல்லைப் பாலம்

வனப்புடனே வளைந்தோடும்
மகா ஓயா மீது - நம்
மனம் கவர நிற்குதிங்கே
மாவனல்லைப் பாலம்

டச்சுக் காலக் கலையொன்று
அச்சுப் பிசகாது - இன்னும்
மெச்சும் படி நிற்குதிங்கே
மாவனல்லைப் பாலம்

செக்கச் சிவந்த நிறத்திலுள்ள
செங்கல் வில் மீது - மிக
பக்குவமாய் நிற்குதிங்கே
மாவனல்லைப் பாலம்

கூறுபட்ட சாலையொன்றை
கூட்டாக இணைத்து - ஒரு
நூறு வருடம் நிற்குதிங்கே
மாவனல்லைப் பாலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொல்லாத போதை

நல்ல தம்பி நல்ல தங்காள்
நலமுடன் இதைக் கேளு - நீ
அல்லலின்றி உலகில் வாழ
பொல்லாப் போதை தவிர்ப்பாய்

கள்ளமில்லா உள்ள முள்ள
நல்ல பிள்ளை உனக்கு - ஏன்
தொல்லை வேண்டும் என உணர்ந்து
பொல்லாப் போதை மறப்பாய்

சித்தம் மகிழும் வண்ணமாக
நித்தம் சிரித்து மகிழும் - உன்
புத்தியையும் போக்க வல்ல
பொல்லாப் போதை துறப்பாய்

இல்லறம்தான் நல்லறம் என
இயம்பினார்கள் அன்று - அந்த
இல்லறத்தை நரகமாக்கும்
பொல்லாப் போதை அழிப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆறு

ஆறு ஆறு ஆறு - மிக
ஆழமான ஆறு
பாரு பாரு பாரு அது
பாயும் எழிலைப் பாரு

ஓடி வரும் ஆறு - பண்
பாடி வரும் ஆறு
கூடி நிற்கும் மரம் மட்டை
குடை பிடிப்பதைப் பாரு

அலை எழும் ஆறு - பல
கிளை சேரும் ஆறு
வலை வீசி மீன் பிடிக்க
வள மிருப்பதைப் பாரு

அணை கொண்ட ஆறு - பெரும்
சுனை கொண்ட ஆறு
வினையேதும் இன்றி நமக்கு
துணை செய்வதைப் பாரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குந்துகாலிகள்

குந்துகாலிப் பறவைகள்
கூட்டங்கூட்ட மாய்வந்து
குந்திக்குந்தித் திரிவதை
கொஞ்சமதோ பாருங்கள்

மண்ணிறத்து வண்ணத்தில்
வந்திருக்கும் பறவைகள்
மண்ணைக் கிளரிப் புழுக்களை
உண்ணுவதைப் பாருங்கள்

சத்தமொன்று கேட்குதே
சண்டையொன்று நடக்குதா?
நித்தம்நித்தம் சத்தமிட்டு
கத்திக்கத்திப் பறப்பதேன்?

சின்னஞ்சிறிய பிள்ளைகள்
சேர்ந்து தினம் மகிழ்ந்திட
இன்றுபோல நாளையும்
எழிலுடனே வாருங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருணை கொள்வோம்

குருட்டு மாமா ஒருவர் அங்கே
குலைந்து கொண்டு அம்மா - மனம்
உருகிப் பிச்சை கேட்ட வண்ணம்
தெரு வழியே வந்தார்

பள்ளி செல்லும் போது நான்
பாதை ஓரமாய் - ஒரு
வெள்ளைப் பிரம்பை நிலத்தில் தட்டி
மெல்ல நடந்து வந்தார்

அவரின் தவிப்பைப் பார்க்க எனக்கு
அழுகை வந்ததம்மா - மிக
கவலையடைந்த எனது உள்ளம்
கருணை கொண்டதம்மா

அப்பா தந்த காசில் ஒரு
அரைவாசி எடுத்து - நான்
அப்பாவி அவர் கையில் வைத்தேன்
அம்மா அவர் பாவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பி உனக்குத்தான்

காலையில் எழுந்திட வேண்டும் - தம்பி
கல்வியில் சிறந்திட வேண்டும்
மாலையில் விளையாடப் பழகி - உடல்
வலிமையை வளர்த்திட வேண்டும்

அறிவைப் பெருக்கிட வேண்டும் - உன்
ஆற்றல் மலர்ந்திட வேண்டும்
நெறி தவறாமல் என்றும் - நீ
நீதியை மதித்திட வேண்டும்

நல்லவை செய்திட வேண்டும் - உன்
நாணயம் ஓங்கிட வேண்டும்
இல்லாமை ஒழிந்திட உலகில் - நீ
என்றும் உழைத்திட வேண்டும்

பெற்றோரைப் பேணிட வேண்டும் - நீ
பெரியோரை மதித்திட வேண்டும்
உற்றாருக் குதவிட வேண்டும் - உன்னை
ஊரார் போற்றிட வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நாம் விரும்பும் வாத்து

நல்ல நல்ல வாத்து
நாம் விரும்பும் வாத்து
குள்ள உருவம் கொண்டு
மெல்ல நடக்கும் வாத்து

குப்பை கிளறும் வாத்து
கூடி வாழும் வாத்து
தொப்பையான உடலை
தூக்கித் திரியும் வாத்து

நீரை விரும்பும் வாத்து
நீந்தி மகிழும் வாத்து
நீரைக் கலக்கி விட்டு
இரை தேடும் வாத்து

ஆடி அசையும் வாத்து
அழகுடைய வாத்து
ஓடி வரும் போது
உவகை தரும் வாத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஞ்சு வீடு

பாப்பா எனக்கு வேலை அதிகம்
படுத்துறங்க நேரமில்லை
தோப்புகளில் ஓடி யாடித்
துள்ளித் திரிய நேர மில்லை

குஞ்சு வீட்டைப் பெருக்க வேணும்
கூட்டாஞ் சோறு ஆக்க வேணும்
பஞ்சணையில் படுத்துறங்கும்
பாவையின் பசி தீர்க்க வேணும்

பாலைக் காய்த்து எடுக்க வேணும்
பாத்திரங்கள் கழுவ வேணும்
ஓலைக் கிடுகு பின்னி எடுத்து
ஓட்டைகளை அடைக்க வேணும்

குடிக்க நீர் எடுக்க வேணும்
கோலமொன்று போட வேணும்
அடித்து துணி துவைப்பதற்கு
ஆறு வரை செல்ல வேணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை என்பது...

வானம் மழையை பொழியும்தான்
வையம் மகிழ்ச்சி கொள்ளும்தான்
கானம் ஒன்றைப் பாடிக் கொண்டு
காற்று வந்து அசையும்தான்

வசந்தம் வந்து மலரும்தான்
வண்ணம் எங்கும் பூக்கும்தான்
அசத்தும் அழகில் உலகமே
ஆர்ப்பரித்து நிற்கும்தான்

இடர் பலவும் நடக்கும்தான்
இகம் அதிர்ந்து கொள்ளும்தான்
அடம் பிடிக்கும் அலைகளுடன்
கடல் பொங்கி எழும்தான்

இயற்கையென்றால் இயற்கைதான்
எழிலும் அழிவும் இருக்கும்தான்
பயக்க வேண்டு மெனின் நன்மை
இயற்கையை பேணுவோம் நாம்

உ. நிசார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை பொழியும் போது

மேகம் திரளுது வானம் இருளுது
மின்னல் எங்கும் மின்ன - அதி
வேகம் கொண்ட காற்றும் வீச
மெல்லப் பொழியுது மழையும்

பதறிக்கொண்டு பறவை யெல்லாம்
சிதறி வானில் பறக்க - அங்கே
கதறிக்கொண்டு பசுவும் வந்தது
கன்றை அழைத்துக் கொண்டு

நெல்லுப் பாயும் மழையில் நனைய
நெஞ்சம் பதறிய வண்ணம் - அதை
உள்ளே கொண்டு வருவதற்கு
ஓடிச் சென்றாள் அம்மா

சின்னஞ் சிறிய சிறுவர் நாமோ
சிந்தை மகிழ்ந்து கொண்டு - உடன்
வண்ண வண்ணக் கப்பல் செய்து
வடிவாய் விட்டோம் மிதக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கைக்கு இடங் கொடுப்போம்

வண்ண வண்ண மீனினங்கள்
வனப்பாக ஓடும் போது
எண்ணி எண்ணிப் பிடிக்க வேண்டாம் - தம்பி
விண்மீன்கள் வெருண்டு ஓடலாம்

காட்டில் உள்ள மானும் முயலும்
களிப்புடனே வாழும் போது
கூட்டில் அடைத்து மகிழ வேண்டாம் - நிலவில்
கோல முயல் ஒளிந்து கொள்ளலாம்

சின்னச் சின்னச் செட்டையுள்ள
வண்ணாத்துப் பூச்சிகளை
கண்ட படி பிடிக்க வேண்டாம் - வானில்
மின்மினிகள் அணைந்து போகலாம்

பஞ்சும் தும்பும் கொண்டமைத்த
பறவைகளின் கூடுகளை
வஞ்சனையால் கலைக்க வேண்டாம் - வண்ண
வானவில்லின் நிறங்கள் பிரியலாம்

உ. நிசார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்ல நல்ல உணவுகள்

நெல்லைக் குற்றி அரிசி யாக்கி
நல்ல சோறு சமைத்து - அதை
மெல்ல பிசைந்து உண்ண உடல்
மெத்த வலிமை கொள்ளும்

மஞ்சள் நிறத் தோசை சுட
மணக்கும் மூக்கைத் துளைத்து-என்னை
கொஞ்சி அம்மா ஊட்டி விட
நெஞ்ச மெலாம் மகிழும்

பிட்டுச் சுட்டு துண்டு வெட்டி
தட்டில் அதைப் போட்டு - நன்கு
இட்டுக் கறியைச் சேர்க்க வயிறு
கொட்டுப் போல நிறையும்

வட்டமான அப்பங்களை
சுட்டு வைத்து விட்டு - அதை
தொட்டுத் தின்ன அம்மா அரைக்கும்
துவையல் நன்கு சுவைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கையில் இருந்து கற்போம்

பறந்து செல்லும் பறவைக் கூட்டம்
என்ன சொல்லுது - அவை
பரந்து விரிந்த வானில் எல்லை
இல்லை யென்குது

மரத்தில் இருந்து உதிரும் இலை
என்ன சொல்லுது - தான்
உரத்தை யூட்டி மரம் வளர
உதவு மென்குது

விரிந்து மலரும் வண்ண மலர்
என்ன சொல்லுது - அது
பறிக்கும் போதும் சிரிப்பதாக
பரிந்து ரைக்குது

ஊர்ந்து செல்லும் எறும்பெமக்கு
என்ன சொல்லுது - என்றும்
சோர்ந்திடாது செல்வங்களை
சேர்க்கச் சொல்லுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர் யார்?

ஓடு போட்ட வீடு ஒன்று
ஓசையின்றி நகருது - பல
கோடுகளால் கோலம் போட்ட
கூரை நன்கு ஜொலிக்குது

ஏற்ற அமைப்பு ஏதுமில்லை
எளிமையான வீடு - சிறு
காற்று ஒளி நுழையக் கூட
கதவு யன்னல் இல்லை

வாலும் தலையும் உள்ள வீடு
வலிமையுடன் நடக்குது - அது
நாலு காலில் நடந்தாலும்
நதியில் இறங்கி நீந்துது

ஒருவர் அங்கே வீட்டுக்குள்ளே
உரிமையுடன் வாழ்கிறார் - அந்த
அருமையான அவரை நாங்கள்
ஆமையென்று அழைக்கிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல பிள்ளை நான்

காலையில் எழுந்ததும் அம்மா - காலைக்
கடன்களை ஒழுங்காக முடித்து விட்டு நான்
சாலையின் வலப்பக்கம் இறங்கி - பாட
சாலையை நோக்கி விரைந்தே நடப்பேன்

பணிவாகப் பள்ளிக்குள் புகுவேன் - மிக
பண்பான தோழருடன் சகவாசம் வைப்பேன்
கனிவான மொழிகளைப் பேசி - என்
காரியங்களை நான் சாதித்துக் கொள்வேன்

ஆசான்களை நான் மதிப்பேன் - அவர்
அறிவுரைகளை நான் ஏற்று நடப்பேன்
பாசாங்கு செய்திட மாட்டேன் - அங்கே
பாடங்களை நான் பற்றுடன் கற்பேன்

இறைவனை என்றும் நான் தொழுவேன் - அவன்
ஏற்றங்களை நான் போற்றிப் புகழ்வேன்
பிறைபோல நானும் வளர்ந்து - ஒரு
பிரகாசமொன்றை உலகுக்களிப்பேன்

உ. நிசார்

Arasady Public Library Municipal Council Batticaloa



Class No:
Acc No 80

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No:
Acc No 80
Arasady Public Library
Municipal Council
Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ. நிசாரின் நட்சத்திரப் பூக்கள், வெண்ணிலா, மலரும் மொட்டுக்கள், சிறகு விரி, பாவிருந்து, இளையநிலா, நல்ல தங்காள், கோமாதா என பல்வேறு சிறுவர் பாடல் தொகுப்புகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன.

சிறுவர்களின் மனவெழுச்சி, கற்பனை வளம், சுவையுணர்வு, இசையார்வம் என்பவற்றை அனுபவ ரீதியாக நன்கு உணர்ந்து அவர் இப்பாடல்களை யாத்துள்ளார்.

இயற்கை, இயற்கையின் எழில், இயற்கையுடனான உறவு, இயற்கையைப் பாதுகாத்தல் என்பவற்றுடன் அன்பு, கருணை, நற்பழக்க வழக்கங்கள், நல்லுபதேசங்கள் என்பவற்றையும் அவர் இப்பாடல்களினூடாக முன்வைத்துள்ளார்.

**தங்கநிலா** காலத்துக்கு ஏற்ற அறிவை இன்றைய சிறுவர்களுக்கு வழங்கக்கூடிய சிறந்ததொரு சிறுவர் பாடல் தொகுப்பாக வெளிவருகிறது.

**பானு வெளியீட்டகம்.**

ISBN 978-955-0503-12-4

9 789550 503124

விலை ரூ. 220/=

Unique Offset - Mawanella - 035 2247016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org